# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC.15/2024 | Date | : 20.11.2025 |
| Deposition of Witness for | : எ.சா.1 | Taluk | : |
| Name | : லோகநாதன் | Calling | : |
| Father Name | : பெருமாள் நாயுடு | Religion | : இந்து |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.11.2025.

**முதல் விசாரணை :**

1) இவ்வழக்கில் நான் எதிரி ஆவேன். இவ்வழக்கின் புகார்தாரரான நகுலன் என்பவரை எனக்கு யார் என்றே தெரியாது. எனது ஊருக்கு 07 கி.மீ தொலைவில் வால்நாயக்கன்பாளையத்தை சார்ந்த விஜேந்திரன் என்பவரிடம் தான் இவ்வழக்கு காசோலையை கொடுத்தேன். நான் போர் வண்டி வைத்து தொழில் செய்து வருகிறேன். மேற்படி, விஜேந்திரனும் அதே தொழில் தான் செய்து வருகிறார். நான் 2018 ம் வருடம் ஒரு போர் வண்டி வாங்கினேன். அதற்கு பணம் குறைவாக இருந்ததால், எனது நண்பர் விஜேந்திரனிடம் பண உதவி கேட்டேன்.

2) நான் ரூ.5 லட்சம் தொகை கேட்டேன், விஜேந்திரன் ரூ.1.50% வட்டிக்கு ரூ.5 லட்சம் கொடுப்பதற்காக அவரது வீட்டிற்கு என்னை வரச்சொன்னார். அதனால், நானும், எனது மனைவியும் கடந்த 2018 ம் வருடம், ஜனவரி மாதம் சென்றோம். விஜேந்திரன் அவர் கொடுத்த கடன் தொகைக்கு ஆதரவாக எனது வங்கி கணக்கு உள்ள State bank of india காசோலைகள் இரண்டும், எனது மனைவியின் வங்கி

கணக்கு உள்ள State bank of india, காசோலைகள் இரண்டையும் பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும் செய்த காசோலையை என்னிடம் பிணையமாக பெற்றார். மேலும், எனது கையொப்பம் உள்ள கடனுறுதி சீட்டும், நானும், எனது மனைவியும் கையொப்பம் செய்த கடனுறுதி சீட்டும் பெற்றுக்கொண்டு ரூ.5 லட்சம் தொகையை கடனாக கொடுத்தார்.

3) கடந்த 2019 ம் ஆண்டு வரை நான் முறையாக வட்டி செலுத்தி வந்தேன். 2019 ம் ஆண்டிற்கு பிறகு கொரானா பரவல் வந்ததால் தொழில் முடக்கம் ஏற்பட்டதால் வட்டி தொகையை சரியாக செலுத்த இயலவில்லை. 2022 ம் வருடத்தில் விஜேந்திரனும், அவரது மனைவியும் என்னிடம் கடனை கேட்டு தகராறு செய்தனர். நான் எனது ஊரை சார்ந்த பஞ்சாயத்து தலைவர் சின்னதம்பி என்பவரிடம் இது குறித்து சொன்னேன். அவர் விஜேந்திரனுக்கும், எனக்கும் இடையே சமரசம் பேசினார். கடந்த 2022 ம் ஆண்டு இறுதிக்குள் அசல் தொகையான ரூ.5 லட்சத்தை மட்டும் நான் எதிரிக்கு கொடுப்பதாக சமரசம் பேசப்பட்டு, விஜேந்திரனும் ஒப்புக்கொண்டார்.

4) அதன்பின்னர், நான் மத்திய பிரதேசத்திற்கு ரிக் வண்டியை ஓட்டுவதற்காக சென்றுவிட்டேன். விஜேந்திரனும் நான் இருந்த பகுதிக்கு சுமார் 40 கி.மீ தொலைவில் ரிக் வண்டி ஓட்டிக்கொண்டிருந்தார். 2022 ம் ஆண்டு, அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மத்திய பிரதேசத்தில் உள்ள எனது அலுவலகத்தில் வைத்து விஜேந்திரனுக்கு 03 தவணைகளாக ரூ.4,50,000/-ம் தொகையை எனது ஏஜெண்ட் கமலேஷ் பட்டேல் என்பவர் முன்னிலையில் திருப்பி செலுத்திவிட்டேன். மீதியுள்ள ரூ.50,000/-த்தை நான் 2023 ம் வருடம், ஜனவரி மாதம் பொங்கல்

பண்டிகைக்காக சொந்த ஊர் வந்திருந்த சமயத்தில் விஜேந்திரனின் வீட்டிற்கு சென்று கொடுத்துவிட்டேன்.

5) நான் கடனை செலுத்தியதால் பிணையமாக கொடுத்த காசோலைகள் மற்றும் கடனுறுதி சீட்டுகளை திரும்பி கேட்டேன். அதற்கு அவர் வேறொரு இடத்தில் கடன் பெற்றிருப்பதாகவும், அதற்கு பிணையமாக எனது ஆவணங்களை கொடுத்திருப்பதாகவும் சொன்னார், அதனை திரும்ப பெற்று என்னிடம் கொடுப்பதாக கூறினார். அதனால், நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர், 15 நாட்கள் கழித்து கரூர் வழக்கறிஞர் கந்தசாமி, என்பவர் எனது மனைவிக்கு ரூ.5 லட்சம் கடன் கொடுத்ததாகவும், அதற்கு காசோலை கொடுத்து வசூலாகாமல் திரும்பியதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்.

6) அதற்கு பின்னிட்டு, ஒரு வாரம் கழித்து நகுலன் என்பவரிடம் நான் ரூ.4 லட்சம் கடன் பெற்றதாகவும், அதற்கு காசோலை கொடுத்து வசூலாகாமல் திரும்பியதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றவுடன் விஜேந்திரன் என்பவரிடம் நேரில் சென்று இதுகுறித்து கேட்டேன். எங்கள் இருவருக்கும் சமரசம் பேசிய பஞ்சாயத்து தலைவரிடமும் இதனை கூறினேன். அதற்கு விஜேந்திரன் கந்தசாமியும், நகுலனும் அவர் பெற்ற கடனுக்காக தான் எனது மற்றும் எனது மனைவியின் காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வழக்கு எதுவும் தாக்கல் செய்ய மாட்டார்கள் என்றும் கூறினார். அதனால், நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை.

7) அதன்பிறகு, நீதிமன்றத்தில் இருந்து எனது மனைவிக்கு அழைப்பாணை வந்தது. எனது மனைவி மீது கந்தசாமி, என்பவர் தாக்கல் செய்துள்ள

காசோலை வழக்கின் புகார் மனுவின் நகலை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். ( **கந்தசாமி தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கின் புகார் மனுவின் நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் எதிரியிடம் எந்த தொகையும் பெறவில்லை, எதிரி என்மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார், எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுகொள்கிறேன்.

Sd/-Loganathan

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.